டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 22.05.2026 வெள்ளிக்கிழமை | பக்கங்கள் 28 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 276 - Madurai | Online Edition

# 2025-26 நிதியாண்டில் சுமார் ரூ.31 கோடி மதிப்புள்ள தேன் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது

## உலகத் தேனீ தின நிகழ்வில் தகவல்




புது தில்லி, மே 21

மத்திய குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் அமைச்சகத்தின் கீழ் செயல்படும் காதி மற்றும் கிராமத் தொழில்கள் ஆணையம் (கேவிஐசி) சார்பில், 'உலகத் தேனீ தினம்-2026', 'மக்களுக்காகவும் தாவரங்களுக்காகவும் ஒன்றிணைந்து செயல்படுவோம்' என்ற கருப்பொருளுடன் புதன்கிழமை அன்று (20.05.2026) சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இதையொட்டி புது தில்லியில் உள்ள ஆணையத்தின் காந்தி தர்ஷன் அலுவலகத்திலிருந்து, அதன் தலைவர் மனோஜ் குமார், நாடு முழுவதும் உள்ள கேவிஐசி அலுவலகங்கள், தேனீ வளர்ப்போர், பயனாளிகள், விஞ்ஞானிகள், மாணவர்கள், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களிடையே காணொலிக் காட்சி மூலம் உரையாற்றினார். மேலும், புனேயில் உள்ள மத்திய தேனீ ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த 'தேன் கண்காட்சியையும்' அவர் காணொலிக் காட்சி மூலம் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் உரையாற்றிய மனோஜ் குமார், தேனீக்கள் இயற்கை மற்றும் வேளாண் சூழல் அமைப்பின் முக்கியப் பாது காவலர்கள் என்றும், பிரதமர் நரேந்திர மோடியின் 'வெண்மைப்

'வெண்மைப் புரட்சியை இனிமைப் புரட்சியாக' மற்றும் தொலை நோக்குப் பார்வை கிராமங்களில் சுய வேலை வாய்ப்பையும் தன்னிறைவையும் துரிதப்படுத்தியுள்ளது என்றும் கூறினார். 2016-ல் குஜராத்தின் பனஸ்கந்தாவில் இருந்து 'இனிப்புப் புரட்சியை' தொடங்கி வைத்தபோது, 'எங்கு வெண்மைப் புரட்சி நிகழ்ந்துள்ளதோ, அங்கு இனி இனிமைப் புரட்சியும் நிகழும்' என்று பிரதமர் கூறியிருந்தார். இது வெறும் முழக்கம் மட்டுமல்ல, கிராமங்கள், விவசாயிகள் மற்றும் தற்சார்பு இந்தியாவை உருவாக்கும் பிரதமரின் தொலைநோக்குப் பார்வையிலிருந்து உத்வேகம் பெற்று, கேவிஜசி 2017-ல் 'தேன் இயக்கத்தை' அறிமுகம் செய்தது. இது தற்போது கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பு மற்றும் தற்சார்புக்கு ஒரு வலுவான காரணியாக மாறியுள்ளது என்று மனோஜ் குமார் குறிப்பிட்டார்.

பிரதமரின் தொலைநோக்குப் பார்வையால் 'தேன் இயக்கம்' திட்டத்தின் கீழ், 2017-18 முதல் 2025-26 வரையிலான ஆண்டுகளில் நாடு முழுவதும் 2,46,099 தேனீப் பெட்டி களையும் தேனீக்களையும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது என்றும், இதன் மூலம் தேன் உற்பத்தி 24,269 மெட்ரிக் டன்னாக அதிகரித்துள்ளது என்றும் கூறினார். 2025-26 ஆம் ஆண்டில், தேன் உற்பத்தி சுமார் 5,512 மெ.டன்களை எட்டியது என்றும் கேவிஜசியுடன் இணைந்த தேனீ வளர்ப்பாளர்கள் 2025-26 நிதியாண்டில் ரூ.31 கோடி மதிப்புள்ள தேனை ஏற்றுமதி செய்துள்ளனர் என தெரிவித்தார். உலக தேனீ தினத் தன்று தேனீக்களைப் பாதுகாக்கவும், அதிகமான மக்களைத் தேனீ வளர்ப்பில் ஈடுபடுத்தவும், பிரதமரின் "இனிப்புப் புரட்சியை" நாட்டின் ஒவ்வொரு கிராமத்திற்கும் கொண்டு செல்லவும் அனை வரும் உறுதியேற்க வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

இந்நிகழ்ச்சியில், நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து கலந்து கொண்ட பங்கேற்பாளர்கள் தேனீ வளர்ப்பு தொடர்பான தங்களது அனுபவங்களையும் வெற்றிக் கதைகளையும் டிஜிட்டல் தளங்கள் மூலம் பகிர்ந்து கொண்டனர். இந்த நிகழ்ச்சியில் கேவிஜசி அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள், பல்வேறு துறைகளைச் சேர்ந்த வல்லுநர்கள், காதி நிறுவனங் களின் பிரதிநிதிகள், கைவினைஞர்கள், பயிற்சியாளர்கள், வங்கி பிரதிநிதிகள், மாநில அரசுகளின் அதிகாரிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, மே 21

சிவகங்கை மாவட்டம், இளையான்குடி வட்டாரம், வேளாண்மைத் துறையின் மூலமாக மாநில விரிவாக்க சீரமைப்பு திட்டம் அட்மா திட்டத்தின் கீழ் உள்மாவட்ட அளவிலான விவசாயிகள் பயிற்சி சம்பந்தமாக நெற்பயிரில் ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி சாலியந்திடல் கிராமத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சியில் வேளாண்மை உதவி இயக்குநர் தங்கபாண்டியன், நெல் ரகங்கள் தேர்வு மற்றும் பசுந்தாள் உரங்கள் பயன்பாடுகள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக் கூறினார். குணசேகரன், வேளாண்மை அலுவலர் (ஓய்வு) நெல் பயிரில் விதை நேர்த்தி பசுந்தாள் உரத்தின் பயன்பாடுகள் வரப்பு பயிர் சாகுபடி ஒருங்கிணைந்த பூச்சி நோய் நிர்வாகம் ஒட்டு பொறி விளக்கு பொறி இயற்கை எதிரிகளான தேனீ பொறி வண்டு சிலந்தி பயன்கள் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துக்கூறினார். மேலும் வட்டார தொழில்நுட்ப மேலாளர் கி.கோகிலா, அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் நெல் நுண்ணூட்டத்தின் பயன்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மூலம் விதைநேர்த்தி செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தார்.

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# அடுப்பில்லா சமையல்

## அடுப்பில்லா சமையலில் பழங்களை மூலப் பொருளாக கொண்ட உணவுகள் : ஓர் அலசல் ஆய்வு

அடுப்பில்லா சமையல் என்பது வெப்பத்தைப் பயன்படுத்தாமல் உணவைத் தயாரிக்கும் ஒரு முறையாகும். இது குறிப்பாக பழங்கள் மற்றும் காய்கறிகளைப் பயன்படுத்தி ஆரோக்கியமான மற்றும் சத்தான உணவுகளை உருவாக்க உதவுகிறது. இம் முறையானது சமையல் நேரத்தைக் குறைப்பதுடன், உணவின் இயற்கையான ஊட்டச்சத்துக்களையும், சுவையையும் பாது காக்கிறது. இந்த ஆய்வு, அடுப்பில்லா சமையலில் பழங்களை அடிப்படையாகக் கொண்ட பல்வேறு உணவுப் பட்டியல்கள், அவற்றின் செய்முறை விளக்கங்கள், உடல்நல நன்மைகள் மற்றும் கவனிக்க வேண்டிய எச்சரிக்கைகள் குறித்து விரிவாக ஆராய்கிறது.

**அடுப்பில்லா பழ உணவுகளின் பட்டியல் மற்றும் செய்முறை விளக்கங்கள்**

அடுப்பில்லா சமையலில் பழங்களைப் பயன்படுத்தி பலவித மான சுவையான மற்றும் ஆரோக்கியமான உணவு களைத் தயாரிக்கலாம்.



சில பிரபலமான உணவுகள் கீழே கொடுக் கப்பட்டுள்ளன :

**1. பழ சாலட் (Fruit Salad)**

**தேவையான பொருட்கள்**

- ஆப்பிள் – 1 (சிறு துண்டுகளாக நறுக்கியது)
- வாழைப்பழம் – 1 (சிறு துண்டுகளாக நறுக்கியது)
- மாதுளை – 1/2 கப் (முத்துக்கள்)
- திராட்சை – 1/2 கப்
- ஆரஞ்சு – 1 (தோல் நீக்கி, துண்டுகளாக்கப்பட்டது)
- தேன் – 1–2 தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)
- எலுமிச்சை சாறு – 1 தேக்கரண்டி (விருப்பத்திற்கேற்ப)
- புதினா இலைகள் – அலங்கரிக்க (விருப்பத்திற்கேற்ப)

**செய்முறை விளக்கம்**

1. அனைத்து பழங்களையும் நன்கு கழுவி, தேவையான வடிவத்தில் நறுக்கிக் கொள்ளவும்.

2. ஒரு பெரிய பாத்திரத்தில் நறுக்கிய பழங்களைச் சேர்க்கவும்.

3. தேன் மற்றும் எலுமிச்சை சாறு சேர்த்து மெதுவாகக் கலக்கவும்.

4. புதினா இலைகளால் அலங்கரித்து உடனடியாகப் பரிமாறவும்.

தொகுப்பு : *G. சுரேஷ்குமார், ஆசிரியர் ஓய்வு, கோவில்பட்டி.*

**நாளை தொடரும்...**

# உழவர் அடையாள எண் பெற விவசாயிகளுக்கு அழைப்பு

நாமக்கல், மே 21

நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சு.கவிதா விடுத்துள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது, நாமக்கல் வட்டார விவசாயிகளுக்கு தமிழ்நாடு அரசின் திட்டங்கள் நேரடியாக தகுதியுள்ள பயனாளிகளுக்கு சென்றடைய விவசாயிகளின் நில உடைமைகளை பதிவு செய்து உழவர் அடையாள எண் வழங்கப்பட்டு வருகிறது.

உழவர் அடையாள எண் இதுவரை பெறாத விவசாயிகள் தற்பொழுது நடைபெற்று வரும் சிறப்பு முகாம்களில் தங்களது ஆதார் அட்டை, நில ஆவணங்கள் மற்றும் ஆதாருடன் இணைக்கப்பட்ட கைப்பேசி எண்ணுடன் தங்கள் கிராமத்திற்கான வேளாண்மை தோட்டக்கலை மற்றும் வேளாண் வணிகத்துறை அலுவலர்களை தொடர்பு கொண்டு இணையதளத்தில் பதிவு செய்து உழவர் அடையாள எண் பெற்று பயன்பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இனிவரும் காலங்களில் உழவர் அடையாள எண் வைத்துள்ள விவசாயிகளுக்கு மட்டுமே பி எம் கிசான் கௌரவ நிதி, மானிய விலையில் விதைகள், உரங்கள், பயிர் காப்பீடு, இயற்கை பேரிடர் நிவாரணத் தொகை மற்றும் அரசின் இதர மானியங்கள் வழங்கப்பட உள்ளதால் இதுவரை பதிவு செய்யாத விவசாயிகள் உடனடியாக தங்களின் நில ஆவணங்களை ஆதாரத்துடன் இணைத்து உழவர் அடையாள எண்ணை பெற்று அனைத்து விவசாயிகளும் பயனடையுமாறு நாமக்கல் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கேட்டுக்கொண்டுள்ளார்.

# தென்னையில் மதிப்புக் கூட்டுதல் என்ற தலைப்பில் பயிற்சி



கன்னியாகுமரி, மே 21

கன்னியாகுமரி மாவட்டம், மேல்புறம் வட்டார வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் அட்மா திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கான உள்மாவட்ட பயிற்சி 'தென்னையில் மதிப்புக் கூட்டுதல்' என்ற தலைப்பில் திக்குறிச்சி கிராமத்தில் நடைபெற்றது.

ஆ.ஷூபா, வேளாண்மை உதவி இயக்குநர், திருவட்டார், தலைமையில் இப்பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியல் விவசாயிகளுக்கு அட்மா திட்ட செயல்பாடுகள் மற்றும் விளைப் பொருட்களை எவ்வாறு மதிப்புக் கூட்டி விவசாயிகள் தங்கள் வருமானத்தை பெருக்க வேண்டும் என்று விளக்கி கூறினார். ராஜ் பிரவீன், இணை பேராசிரியர் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் பேச்சிப்பாறை தென்னையில் மதிப்புக்கூட்டுதல் மற்றும் அறுவடை பின்சார் தொழில்நுட்பங்கள குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி வழங்கினார்.

ஆ.சுபாஸ், வேளாண்மை அலுவலர், மதிப்புக்கூட்டு பொருட்களை சந்தைப்படுத்துதல் குறித்து கூறினார். துணை வேளாண்மை அலுவலர் வு.ளு முத்து, வேளாண் துறை மூலம் செயல்படுத்தபடும் திட்டங்கள் மற்றும் உளுந்து சாகுபடி குறித்து கூறினார். வு.சஜுலா, வட்டார தொழில்நுட்ப மேலாளர், தென்னை தாக்கும் பூச்சி நோய் மேலாண்மை குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார். பயிற்சியின் முடிவில் கலந்து கொண்ட 40 விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை மற்றும் மதிய உணவு வழங்கப் பட்டது. பயிற்சிக்கான ஏற்பாடுகளை, உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் மு.மல்லிகா, னு.ஷைஜூ செய்திருந் திருந்தனர்.



# நவீன வேளாண்மையில் உயிர் உரங்கள்

மண் எனப்படுவது கோடிக்கான நுண்ணுயிர்களின் இருப்பிடம் எல்லா மண்ணும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை. மண்ணில் உள்ள நுண்ணுயிர்கள் இடத்திற்கு இடம் தட்பவெப்ப சூழலுக்கேற்ப வேறுபடுகின்றன. இக்குறைபாட்டினை நிறைவு செய்திட நுண்ணுயிர்கள் உயிர் உரமாக அளித்திட வேண்டிய சூழல் ஏற்படுகிறது.




## உயிர் உரம்

உயிர் உரம் என்பது இயற்கை உரத்தின் ஓர் அங்கமாகும். பாக்டீரியகாக்களை பூஞ்சானங்களையும் கொண்டு தயாரிக்கப் படும் இவ்வுரம் மண்வளத்தை மேம்படுத்தி அதன் மூலம் பயிர் விளைச்சலை அதிகரித்து, நல்ல தரமான வேளாண் பொருட்கள் கிடைக்க ஏதுவாக அமைகின்றது.

இவ்வுயிர் உரங்கள் மண்ணில் இடப்பட்டதும் அதில் உள்ள நுண்ணுயிரிகள் மண்ணில் சென்று அதிக பொருக்கம் அடைந்து, மண்ணில் ஊட்டச்சத்து இருப்பை மேம்படுத்தி பயிருக்குத் தேவையான ஊட்டச்சத்துக்களை அளிக்கிறது. பல்வேறு வகையான உயிர் உரங்கள் பயிர்களுக்கேற்றவாறு உபயோகப்படுத்தப்படுகிறது. ரைசோபியம், அசோலா, அசோஸ் பைரில்லம், அசட்டோபேக்டர் போன்ற உயிர் உரங்கள் தழைச் சத்து மேம்பாட்டிற்காகவும் பாஸ்போ பாக்டீரியா மற்றும் வேர் உட்பூசணம் மணிச்சத்து மேம்பாட்டிற்காகவும் பயன்படுத்தப் படுகிறது.

## தழைச்சத்திற்கான நுண்ணுயிர் உரங்கள்

கண்ணுக்குத் தெரியாத திறன் மிக்க நுண்ணுயிர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட கலவையே நுண்ணுயில் உரமாகும். அங்கக வேளாண்மையில் நுண்ணுயிர் உரங்களை உபயோகப் படுத்துவதால், மண்ணின் வளம் மேம்படுத்தப்படுவதோடு, சுற்றுச் சூழுலும் பாதுகாக்கப்படுகின்றது.

நுண்ணுயிர் உரங்களை உபயோகப்படத்துவதால் 30 சதவீத தழைச்சத்து சேமிக்கப்படுகின்றது. சில நுண்ணுயிர்கள் தழைச் சத்தை நிலை நிறுத்துவதோடு பயிர் வளர்ச்சிக்குத் தேவையான பயிர் வளர்ச்சி ஊக்கிகளான இன்டோல் அசிட்டிக் அமிலம் மற்றும் ஜிப்ரலிக் அமிலம் போன்றவற்றை உற்பத்தி செய்கின்றது. இதனால் பயிர்களில் அதிக வேர்களும் தூர்களும் மற்றும் இலைகளும் தோன்றி வளர்ச்சிக்கு உதவுகின்றன.

## ரைசோபியம்

ரைசோபியம் பாக்டீரியா இனத்தைச் சார்ந்த நுண்ணுயிர் ஆகும். அவரைக் குடும்பத்தைச் சார்ந்த பயிர்களுடன் கூட்டு வாழ்க்கை நடத்தி பயிர்களின் வேர்களில் வேர் முடிச்சுகளை உண்டாக்குகின்றது. ரைசோபியம் காற்றில் இருக்கும் தழைச் சத்தை வேர் முடிச்சுகளில் நிலை நிறுத்துக்கிறது.

**நாற்றுக்களின் வேர்களை நனைத்தல்**

இரண்டு பொட்டலங்கள் (400 கிராம்) அசோஸ்பைரில்லத்தை 2 லிட்டர் தண்ணீரில் கலக்கவும். இக்கரைசலில் நாற்றுக்களின் சேர்த்து நனையும் படி 20 நிமிடங்கள் வைத்திருந்து பின்பு நடவு செய்யும்.

**நடவு வயலில் இடுதல்**

நான்கு பொட்டலங்கள் (800 கிராம்) அசோஸ்பைரில்லத்தை 20 கிலோ தொழு உரத்துடன் கலந்து ஒரு ஏக்கர் நடவு வயலில் நடுவதற்கு அல்லது விதைப்பதற்கு முன்பு தூவவும்.

**வளர்ந்த பயிர்களுக்கு இடுதல்**

ஏற்கனவே வளர்ந்த பயிர்களுக்கு ஒரு செடி ஃ மரத்திற்கு ஊற்று பொறுத்து 20 முதல் 50 கிராம் அசோஸ்பைரில்லத்தை ஒரு கிலோ தொழு உரத்துடன் கலந்து, பயிர்களின் வேர்ப்பாகத்தில் இட்டு மண்ணால் அணைக்கவும்.

**ஏற்ற பயிர்கள்**

நெல், தானியப் பயிர்கள், கரும்பு, பருத்தி, எள், சூரியகாந்தி மற்றும் தோட்டக்கலைச் செடிகள் மற்றும் மரக்கன்றுகள்.

**மணிச்சத்திற்கான நுண்ணுயிர் உரங்கள்**

பயிர்களின் வளர்ச்சிக்குத் தேவையான முக்கியமான சத்துக்



களில் மணிச்சத்து ஒன்றாகும். தாவரங்களின் முக்கிய செயல்களான உணவு தயாரித்தல் மலர் காய் கனிகளை உற்பத்தி செய்தல் மேலும் நல்ல விதைகளை உருவாக்கு வதற்கும் மணிச்சத்து தேவைப்படுகிறது. பயிர்களின் வேர்கள் நன்கு வளர்வதற்கும் திசுக்கள் நன்முறையில் வளர்ச்சி அடைவதற்கும் தாவரங்களின் இனப்பெருக்கத்திற்கும் இம்மணிச்சத்து தேவைப் படுகிறது.

**மண்ணில் உள்ள மணிச்சத்து நிலை**

நிலத்தில் இடும் மணிச்சத்தில் பெரும்பகுதி பயிர்கள் நேரடியாக எடுத்துக்கொள்ள முடியாத நீரில் கரையாத நிலைக்கு மண்ணில் மாற்றப்படுகிறது. நாம் இடும் மணிச்சத்தில் சுமார் 20 முதல் 25 சதவிகிதம் தான் பயிர்களுக்குக் கிடைக்கின்றது. பெரும் பகுதி கரையாத நிலைக்கு மாற்றப்பட்டு பயிர்களுக்கு பயன்படாமல் விரையமாகின்றது.

**மணிச்சத்து கிடைக்கச் செய்யும் நுண்ணுயிர் உரங்கள்**

**பாஸ்போபாக்டீரியா**

மண்ணில் கரையாத மணிச்சத்தைக் கரைக்கும் பாக்டீரி யாவை 'பாஸ்போபாபக்டீரியா' என்று அழைக்கின்றோம்.

**உபயோகப்படுத்தும் முறைகள்**

- 10 கிலோ விதைகளுக்கு ஒரு பொட்டலம் ரைசோபியம் (200 கிராம்) என்ற அளவில் உபயோகப்படுத்த வேண்டும்
- இலைமக்கு மண் அல்லது கரித்தூளில் கலக்கப்பட்ட ரைசோபியம் நுண்ணுயிரை ஒரு குவளை (200 மி.லி) அரிசிக் கஞ்சியில் கலந்து கலவை தயார் செய்ய வேண்டும்
- இக்கலவையில் தேவையான அளவு விதைகளை இட்டு, எல்லா விதைகளிலும் கலவை ஒட்டிடுமாறு நன்றாகக் கலக்க வேண்டும்
- கலந்த விதைகளை நிழலில் 30 நிமிடங்கள் உலர்த்தி உடனடியாக விதைக்கவும்.

தகவல் : ***யுவராஜா தட்சிணாமூர்த்தி, வேளாண்மை உதவி பேராசியர், ஸ்ரீ சக்தி பொறியியல் கல்லூரி, கோவை.***

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

LMW isha


Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

POWERGRID BHEL

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# நீர்ப்பாசன முறைகளில் எது சிறந்தது தெரியுமா?




நீரின்றி அமையாது உலகு. விவசாய சாகுபடிக்கு அடிப்படையான நீர்ப்பாசனமே ஏரிகள், கண்மாய், குளம், குட்டை, கிணறு, போர்வெல், வாய்க்கால் மூலமாக நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. பயிரின் தன்மை, மண்ணின் தன்மை, நீர்ப்பாசன வசதியை பொருத்தே நீர்ப்பாசன முறைகளை தேர்வு செய்யப்பட வேண்டும். இருக்கின்ற நீரை மிகவும் சிக்கனமாகவும் அதிக பரப்பளவில் பயன்படுத்த கூடிய முறைகளை தேர்வு செய்ய வேண்டும். நீர் ஒரு அரிய இடுபொருள் சிக்கனமாகவும் சிறப்பாகவும் பயன்படுத்தக்கூடிய வழிமுறைகளை பற்றி விரிவாக பார்ப்போம்.

ஒவ்வொரு முறையிலும் தனித்துவமான நன்மைகள் உள்ளன.

### 1) சொட்டு நீர்பாசனம் (DRIP IRRIGATION)

இம்முறையில் குழாய் மூலமாக நீர் நேரடியாக பயிர்களின் வேர் பகுதியில் (ROOT ZONE) நனைக்கப்படுகிறது. நீர் வீணாகுவது தடுக்கப்படும். தேவையற்ற இடங்களில் நீர் பாயாததால் களைகளும் (WEEDS) குறைகிறது. இதனால் களை எடுக்கும் செலவும் கணிசமாக மிச்சப்படும். எனினும் இதனை அமைப்பதற்கான மூதலிட்டு செலவு INSTALLATION COST அதிகம் இருந்தாலும் கூட சிறு/குறு விவசாயிகளுக்கு மத்திய, மாநில அரசுகள் PMKSY திட்டத்தின் கீழ்100% மானியம் வழங்கப்படுகிறது என்பது குறிப்பிட்ட தக்கது.

**2) தெளிப்பு நீர் பாசனம் (SPRINKER IRRIGATION)**

இந்த முறையில் மழை போன்று பயிரின் மீது தெளிக்கப்படும் முறையாகும். மிக குறுகிய காலத்தில் அதிகளவு பரப்பளவில் நீர்ப்பாசன செய்ய முடியும். நீர் காற்றில் தெளிக்கப்படுவதால் வெயிலின் காரணமாக நீர் ஆவியாகி வீணாகும் வாய்ப்பு குறைவு. இதில் மழைத்தூவான் என்ற (RAIN GUN) பயன் படுத்தலாம்.

**3) சம தள பாசனம் ( SURFACE IRRIGATION)**

நிலத்தை சுற்றிலும் வரப்பு கட்டி குறிப்பிட்ட பகுதியை முழுமையாக நீர் நிரப்பி பாய்ச்சும் முறையாகும். நெல் சாகுபடி மற்றும் பழ மரங்களுக்கு உகந்ததாகும். இந்த முறையில் அதிகப்படியான நீர் தேங்கி இருக்கும் பயிருக்கு காற்றோட்ட வசதி கிடைக்காது, வேர் அழுகல் போன்ற நோய் வர வாய்ப்புள்ளது.

**4) அடுக்கு / சாய்வு நீர்ப்பாசனம் (BASIN / FURROW IRRIGATION)**

மரங்கள் நீண்ட வரிசையில் நடப்படும் பயிர்களுக்கு ஏற்றது. வரப்பு கட்டி நீர்ப்பாசன மேற்கொள்ளப்பட வேண்டும்.

**5) கை முறை பாசனம்**

நர்சரி போன்ற சிறிய பரப்பளவிற்கு பூவாளி போன்ற பாத்திரங்களை கொண்டு நீர்ப்பாசன செய்யும் முறையாகும். அதிக படியான நீர் தேங்கிட வாய்ப்பு இல்லை.

எது சிறந்தது? என்பதை அவரவர் நீரின் அளவிற்கேற்ப தேர்ந்தெடுக்கப்பட்டு பயன்படுத்திட வேண்டும். நாம் சாகுபடி செய்யும் பயிர் மண்ணின் தன்மைகேற்ப பாசன வசதியை மேற்கொள்ள வேண்டும். இருக்கின்ற நீரை சிக்கனமாகவும் சமசீராகவும் பயன்படுத்தி கூடுதலான மகசூல் பெற முயற்சிப்போம். ஒவ்வொரு துளி நீரிலும் அதிக பயிர் ( PER DROP MORE CROPS) என்ற தொலை நோக்கு பார்வையுடன் செயல்பட வேண்டும்.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

# உர விற்பனை நிலையங்களில் வேளாண் அதிகாரிகள் திடீர் ஆய்வு




புதுக்கோட்டை, மே 21

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள உர விற்பனை நிலையங்களில் திருச்சி, வேளாண் உதவி இயக்குர் (தரக்கட்டுப்பாடு) தலைமை யிலான பறக்கும் படையினரால் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு ஆய்வின் போது 8 விற்பனை நிலையங்களுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டது என புதுக்கோட்டை மாவட்ட வேளாண் இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது, புதுக்கோட்டை மாவட்டத்தில் தற்பொழுது சாகுபடி செய்யப்பட்டுள்ள நெல், மக்காச்சோளம், நிலக்கடலை, உளுந்து, கரும்பு, தென்னை, காய்கறிகள், மா, வாழை மற்றும் மரவள்ளி கிழங்கு ஆகிய பயிர்களுக்கு தேவையான உரங்களான யூரியா 4363 மெட்ரிக் டன்கள், டிஏபி 1226 மெட்ரிக் டன்கள், பொட்டாஷ் 1081 மெட்ரிக் டன்கள், காம்ப்ளக்ஸ் 4962 மெட்ரிக் டன்கள் மற்றும் சூப்பர் பாஸ்பேட் 731 மெ.டன்கள் ஆகியன தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்கள் ஆகியவற்றில் இருப்பு வைக்கப்பட்டு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில், வேளாண்மை இயக்குநரின் உத்தரவுபடி தமிழ்நாடு முழுவதும் உள்ள உர விற்பனை நிலை யங்களில் மாவட்டங்களுக்கிடையே பறக்கும் படை அமைத்து திடீர் ஆய்வு மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டது. புதுக்கோட்டை மாவட்ட உர விற்பனை நிலையங்கள் திருச்சி, வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) இரா.மு.மாரியப்பன், தலைமையில் அமைக்கப்பட்ட குழுவால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாவட்டத்தில் உள்ள உர விற்பனை நிலையங்களில் உரக் கட்டுப்பாட்டு ஆணை 1985-இன் படி உர விற்பனை உரிமம் பெற்று விற்பனை நடைபெறுகிறதா, அனுமதி பெற்ற இடங்களில் விற்பனை நடைபெறுகிறதா, விவசாயிகளுக்கு உர விற்பனை பட்டியல்கள் முறையாக வழங்கப்படுகிறதா, உரங்கள் விற்பனை முனையக் கருவி மூலம் விற்பனை செய்யப்படுகிறதா மற்றும் உர இருப்பு ஆகியவைகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டது. உரக்கட்டுப்பாட்டு ஆணையின்படி செயல்படாத உர விற்பனை நிலையங்களுக்கு விற்பனை தடை விதிக்கப்பட்டது.

மேலும், விவசாயிகளுக்கு தரமான உரங்கள் விநியோகம் செய்யப்படுகிறதா என உர ஆய்வாளர்கள் திடீர் ஆய்வு மேற்கொள்ளும் பொழுது, உரங்களை, அதிக விலைக்கு விற்பனை செய்தல், விவசாயம் அல்லாத தேவைகளுக்கு மானிய உரங்களை விற்பனை செய்தல், உரம் கடத்தல், பதுக்கல் ஆகிய செயல்களில் ஈடுபடுவது கண்டறியப்பட்டால் அத்தியாவாசிய பண்டங்கள் சட்டம் – 1955, உரக்கட்டுபாட்டு ஆணை – 1985 மற்றும் உர நகர்வு கட்டுப்பாட்டு ஆணை 1973 ஆகியவற்றின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், மீறினால் உர உரிமம் இரத்து செய்யப்படும் எனவும் எச்சரிக்கப்படுகிறது என புதுக்கோட்டை வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி தெரிவித்துள்ளார்.



# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் 'தாவரத்திசு வளர்ப்பு நுட்பங்கள்' குறித்த செய்முறைப் பயிற்சி



கோயம்புத்தூர், மே 21

வேளாண்மையில், நல்ல தரமான நடவுப் பொருட்களைப் பயன்படுத்துதல், சரியான நேரத்தில் நடவு செய்தல், பயிர் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்துக்களைப் பலவகை சாகுபடி முறைகளிலும் சமச்சீரான முறையில் இடுதல் உள்ளிட்ட செயல் முறைகளின் தொகுப்பைக் கடைப்பிடிப்பதில் இருந்தே, விவசாய விளை பொருட்களின் உற்பத்தியும் தரமும் உறுதி செய்யப்படுகிறது.

சமீபத்திய ஆண்டுகளில், தாவரத் திசு வளர்ப்பு முறைகள், விவசாயிகளின் நலனுக்காக வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பல பயிர்களின் உயர் தரமான, நோயற்ற மற்றும் மரபணு ரீதியாகத் தூய்மையான நாற்றுகளை உற்பத்தி செய்வதன் மூலம் விவசாயத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியுள்ளன. இது விவசாயத்தின் நிலையான வளர்ச்சி இலக்குகளை அடைவதற்கான பாதையில் ஒரு மாபெரும் பாய்ச்சலாகும். விவசாயிகளின் நலனுக்காக நிறுவனங்களால் திசு வளர்ப்பு செய்யப்பட்ட வாழை நாற்றுகளின் வணிக உற்பத்தி தொடங்கியுள்ளதால், இந்தியாவின் தாவரத் திசு வளர்ப்பு வணிகம் காலப்போக்கில் வேகமாக வளர்ந்து வருகிறது. மே 19-22, 2026 வரை கோயம்புத்தூரில் உள்ள தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் (TNAU) நடைபெற்ற 'தாவரத் திசு வளர்ப்பு நுட்பங்கள்' குறித்த செய்முறைப் பயிற்சி அமர்வின் போது, தாவரத் திசு வளர்ப்பு அணுகுமுறைகளின் முக்கியத்துவம், முக்கிய சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள் எடுத்துரைக்கப்பட்டன. இந்தப் பயிற்சியானது, தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரித் தொழில்நுட்ப மையத்தின் தாவர உயிரித் தொழில் நுட்பத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா, மகாராஷ்டிரா உள்ளிட்ட இந்தியா முழுவதிலுமிருந்து அறிஞர்கள், விவசாயிகள், தொழில்முனைவோர், ஆராய்ச்சியாளர்கள், பள்ளி மாணவர்கள் மற்றும் அறிவியல் ஆர்வலர்கள் உட்பட பல்வேறு பின்னணி களைச் சேர்ந்த பங்கேற்பாளர்கள் கலந்து கொண்டனர். தாவர உயிரி தொழில்நுட்பத் துறையின் பேராசிரியரும் தலைவருமான முனைவர் ஈ.கோகிலாதேவியின் வரவேற்பு உரையுடன் அமர்வு தொடங்கியது. தாவரத் திசு வளர்ப்பின் நோக்கங்கள் குறித்துக் கருத்துரைத்ததோடு, இப்பயிற்சித் திட்டத்தின் முக்கிய பயன்கள், கோட்பாடு மற்றும் செய்முறை அமர்வுகளில் கையாளப்படும் தொழில்நுட்ப முறைகளை வலியுறுத்தினார். தாவர மூலக்கூறு உயிரியல் மற்றும் உயிரி தொழில்நுட்ப மையத்தின் இயக்குனர் முனைவர் ந.செந்தில், தனது தொடக்க உரையில், தாவர திசு வளர்ப்புத் துறையின் தற்போதைய நிலை குறித்த புள்ளி விவரங் களையும், பயிற்சியில் பின்பற்றப்பட வேண்டிய பல்வேறு வளர்ப்பு நுட்பங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டத்தையும் வழங்கினார்.

திசு வளர்ப்புத் தாவரங்களின் உற்பத்தி மற்றும் விநியோகத்தை விரைவுபடுத்துவதில் உள்ள சவால்களைச் சமாளிக்க, தாவர திசு வளர்ப்பில் உள்ள வாய்ப்புகளையும் சவால்களையும், பயிற்சி பெற்ற மனித வளத்தின் தேவையையும் அவர் எடுத்துரைத்தார். தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தின் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவன முதன்மையர், முனைவர் க.வெங்கடேசன் ஆற்றிய சிறப்புரையில், பழங்கள் மற்றும் அலங்காரப் பயிர்களில் திசு வளர்ப்பின் சாத்தியக் கூறுகளை அவர் வலியுறுத்தினார். மேலும், விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தரமான நாற்றுகளை உற்பத்தி செய்வதில் தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகத்தில் தாவர திசு வளர்ப்பு அடைந்த வெற்றிப் பயணத்தையும் அவர் விவரித்தார்.

வணிக ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த வேளாண், தோட்டக் கலைப் பயிர்கள் மற்றும் வன மர இனங்களைப் பெருக்குவதை நோக்கமாகக் கொண்ட தாவரத் திசு வளர்ப்பு நுட்பங்களின் அடிப்படைகள் மற்றும் நடைமுறைகள் குறித்த செய்முறைப் பயிற்சி, இந்தியாவின் பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த 27க்கும் மேற்பட்ட பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்டது. முனைவர் சு.ராஜேஷ், இணைப் பேராசிரியர் (உயிர் தொழில்நுட்பம்) மற்றும் பயிற்சி அமைப்பாளர் நன்றியுரை வழங்கினார். மேலும், தாவர இனப்பெருக்கத்தின் நவீன நடைமுறைகளில் ஒரு சிறந்த கற்றல் அனுபவத்துடன் இந்த நிகழ்வை வெற்றிகரமாக நடத்தியதற்காக, பயிற்றுனர்கள் மற்றும் பங்கேற்பாளர்களை பாராட்டினார்.

# உலக தேனீ தினத்தை முன்னிட்டு பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரியில் தேனீ வளர்ப்பு பயிற்சி



நாமக்கல், மே 21


உலக தேனீ தினத்தை முன்னிட்டு நாமக்கல் மாவட்டம் பிஜிபி வேளாண் கல்லூரியின் பூச்சியியல் துறை மற்றும் இறுதியாண்டு தேனீ வளர்ப்பு மாணவர்கள் இணைந்து விவசாயிகளுக்கான தேனீ வளர்ப்பு பயிற்சியை சிறப்பாக நடத்தினர்.

இப்பயிற்சியில் 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு தேனீ வளர்ப்பின் நவீன முறைகள், தேனீ கூட்ட மேலாண்மை, தேன் சேகரிப்பு மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான பயனுள்ள தகவல்களை அறிந்து பயன் பெற்றனர்.

நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் கோபால், துணை முதல்வர் சீனிவாசன் மற்றும் பூச்சியியல் துறை தலைவர் தரணி பிரியா மற்றும் பூச்சியியல் துறை உதவி பேராசிரியர் கிருத்திகா ஆகியோர் தலைமை வகித்தனர். சிறப்பு விருந்தினராக பன்னிரண்டு ஆண்டுகள் அனுபவம் உள்ள தேனீ வளர்ப்பு நிபுணர் விஷ்ணு மனோகரன் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு நடைமுறை விளக்கங் களுடன் கூடிய பயிற்சியை வழங்கினார்.

பயிற்சியின் நிறைவாக கலந்து கொண்ட அனைத்து விவசாயி களுக்கும் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சி விவசாயிகளிடையே நல்ல வரவேற்பைப் பெற்றது.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**


கல்யாண்
ஜுவல்லர்ஸ்
Toll Free No. 1800 - 4257333

# அட்மா - மாடித் தோட்டம் [Terrace Gardening] குறித்த விவசாயிகள் பயிற்சி



சிவகங்கை, மே 21

சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டாரத்தில் வேளாண்மை துறை – அட்மா விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் மாடித் தோட்டம் அமைப்பது மற்றும் சமச்சீர் உர மேலாண்மை குறித்த விவசாயிகள் பயிற்சி வேளாண்மை விரிவாக்க மையத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் தா.மலர்விழி, நெல் இரகங்கள் தேர்வு மற்றும் உயிர் உரங்களின் பயன்பாடு பற்றி கூறினார். ராஜேஷ் நல்லையா (RNR Agri developer) மாடித் தோட்டம் மற்றும் நஞ்சில்லா காய்கறிகளின் உற்பத்தி குறித்த தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார். உதவி வேளாண்மை அலுவலர் கரும்புசெல்வம் மற்றும் பிரியா, வேளாண்மை துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் pm kisan விவசாய அடையாள அட்டை பதிவு செய்வதன் முக்கியத்துவம் பற்றி எடுத்துக் குறித்து கூறினார்கள். உதவி தோட்டக்கலை அலுவலர் செல்வக்குமார், தோட்டக்கலைத் துறை திட்டங்கள் பற்றி எடுத்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் சத்யா, அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் நெல் நுண்ணூட்டத்தின் பயன்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார்.

உதவி தொழில்நுட்ப மேலாளர் நந்தினி, பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மூலம் விதை நேர்த்தி செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தனர். திருப்புவனம் வட்டார விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# ஊறுகாய்புல் தயாரிப்பு மற்றும் பசுந்தீவன உற்பத்தி மற்றும் சமச்சீர் உர பயன்பாடு குறித்த பயிற்சி




ஈரோடு, மே 21

ஈரோடு மாவட்டம், கொடுமுடி வட்டாரம், வேளாண்மைத்துறை கீழ், செயல்படும் வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் மூலம் எழுநூத்துமங்கலம் கிராமத்தில் உழவர்களுக்கு ஊறுகாய்புல் தயாரிப்பு மற்றும் பசுந்தீவன உற்பத்தி பற்றிய பயிற்சி நடைபெற்றது. இதில் கால்நடை ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிலைய தலைவர் மற்றும் பேராசிரியர் யசோதை, கலந்து கொண்டு ஆடு, மாடு வளர்க்கும் முறை மற்றும் உணவூட்டமுறை, நோய் மேலாண்மை மற்றும் தடுப்புசி பயன்பாட்டு முறைகள் பற்றி தெரிவாகவும் விரிவாகவும் எடுத்துரைத்தார்.

மேலும் ஊறுகாய்புல் தயாரிப்பு மற்றும் பசுந்தீவன உற்பத்தி பற்றியும் எடுத்து கூறினார். கொடுமுடி வட்டார வேளாண்மை உதவி அலுவலர் அரவிந்த், சமச்சீர் உர பயன்பாடு பற்றியும் பசுந்தாள் மற்றும் பசுந்தழை உரங்கள் இடுவதின் மூலம் சுற்றுச்ச+ழல் பாதிக்காத வகையில் தழைச்சத்து மண்ணில் அதிகரிக்கலாம். அதன் மூலம் யூரியா மற்றும் அம்மோனியம் சல்பேட் போன்ற உரங்களின் பயன்பாட்டினை வெகுவாக குறைக்கலாம் என்று எடுத்து கூறினார். மேலும் இப்பயிற்சியில் மண்மாதிரி சேகரித்தல், உயிர் உரங்கள், நெல் நுண்ணூட்டம் மற்றும் பாரம்பரிய நெல் இரகங்களின் விதைகள், இலை வண்ண அட்டை போன்ற தொழில்நுட்பங்கள் பற்றி விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் விவசாய அடையாள அட்டை மற்றும் விவசாய கௌரவ நிதி திட்டம் பற்றியும் இப்பயிற்சியில் கூறப்பட்டது. இப்பயிற்சிக்கான ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் மற்றும் வட்டார தொழில்நுட்ப மேலாளர்கள் செய்திருந்தனர்.

# உயிர் உரங்களின் பயன்பாடு மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் குறித்த விவசாயிகள் பயிற்சி

சிவகங்கை, மே 21

சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டாரத்தில் வேளாண்மை துறை அட்மா திட்டத்தின் கீழ் உயிர் உரங் களின் பயன்பாடு மற்றும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் குறித்த விவசாயிகள் பயிற்சி எருமைப்பட்டி கிராமத்தில் நடைபெற்றது.

வேளாண்மை உதவி இயக்குநர் (பொ) நா.ஞானவேல், தலைமை உரை வழங்கியதோடு விதை இரகங்கள் தேர்வு, அதன் பயன்பாடு பற்றி றினார். வேளாண்மை அறிவியல் நிலையம், குன்றக்குடி, நாகலட்சுமி, உயிர் உரங்கள் பயன்பாடு மற்றும் பயன்படுத்தும் முறை, மண் பரிசோதனைக்கு மண் மாதிரி சேகரிக்கும் முறையும் உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள் அதன் பயன்பாடு பற்றியும் கூறினார். துணை வேளாண்மை அலுவலர் வெ.பாலமுருகன், உயிர் உரம் தயாரிக்கும் முறை மற்றும் பயிரில் உயிர் உரங்களின் பயன்பாடு குறித்த தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார். மேலும் வேளாண்மை துறை மூலம் செயல் படுத்தப்படும் திட்டங்கள் குறித்து கூறினார். வட்டார தொழில்நுட்ப மேலாளர் க.கிருஷ்ண சாமி, அட்மா திட்டத்தின் செயல்பாடுகள் மற்றும் நெல் நுண்ணூட்டத்தின் பயன்பாடுகள் பற்றியும் எடுத்துரைத்தார். உதவி தொழில்நுட்ப மேலாளர் பூ.அழகு சுந்தரம், பயிற்சிக்கான ஏற்பாடுகளை செய்து விவசாயிகளுக்கு உயிர் உரங்கள் மூலம் விதைநேர்த்தி செயல்முறை விளக்கம் செய்து காண்பித்தனர். விவசாயிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர்.

# லாபம் தரும் புறக்கடை கோழி வளர்ப்பு பயிற்சி – தேதி மாற்றம்

திருச்சி, மே 21

திருச்சி மாவட்டம், சிறுகமணி வேளாண்மை அறிவியல் நிலையம் மூலம் பல்வேறு பயிற்சிகள், விழிப்புணர்வு நிகழ்வுகள் மற்றும் செயல்விளக்கங்கள் நடத்தப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக, இளைஞர்களை தொழில் முனைவோராக மாற்ற 22.05.2026 (வெள்ளிக்கிழமை) அன்று நடைபெற இருந்த

புறக்கடை கோழி வளர்ப்பு பற்றிய ஒரு நாள் நிலையப் பயிற்சி நிர்வாகக் காரணங்களுக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பயிற்சி தேதி பின்னர் அறிவிக்கப்படும். மேலும் தகவல்களுக்கு 0431 2962854, 99424 49786, 88381 26730, 97156 26796 என்ற எண்ணை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

மேற்கண்ட தகவல்களை வேளாண்மை அறிவியல் நிலைய திட்ட ஒருங்கிணைப்பாளர் முனைவர் ந.புனிதவதி தெரித்தார்.



# படைப்புழு : விவசாயிகளுக்கு புதிய சவால்



**அறிமுகம்**

இந்திய வேளாண்மையில் அண்மைக் காலங்களில் அதிக கவலை ஏற்படுத்திய பூச்சிகளில் முக்கியமானது “படைப்புழு” ஆகும். முதன் முதலில் அமெரிக்க கண்டங்களில் காணப்பட்ட இந்த பூச்சி, தற்போது இந்தியா உட்பட பல நாடுகளில் வேகமாக பரவி வருகிறது. குறிப்பாக மக்காச்சோளப் பயிரில் மிகப்பெரிய சேதத்தை ஏற்படுத்தி, விவசாயிகளின் வருமானத்தையும் உணவு பாதுகாப்பையும் பாதிக்கிறது.

**படைப்புழு என்றால் என்ன?**

படைப்புழு என்பது இரவு நேரங்களில் செயல்படும் ஒரு தீங்கு விளைவிக்கும் பூச்சியாகும். இதன் இளம் புழுக்கள் இலைகளை தீவிரமாகத் தின்று பயிர்களின் வளர்ச்சியை பாதிக்கின்றன. இவை கூட்டமாக நகர்ந்து வயல் முழுவதும் தாக்குவதால் “படைப்புழு” என்று அழைக்கப்படுகிறது.

**தாக்கப்படும் முக்கிய பயிர்கள்**

- மக்காச்சோளம்
- சோளம்
- நெல்
- கம்பு
- கரும்பு
- சில காய்கறி பயிர்கள்

இதில் மக்காச்சோளம் மிகவும் அதிகமாக பாதிக்கப்படுகிறது.

**தாக்கத்தின் அறிகுறிகள்**

1. இலைகளில் நீளமான கிழிவுகள் காணப்படும்.
2. செடியின் நடுப் பகுதியில் கருப்பு கழிவுப் பொருட்கள் இருக்கும்.
3. இளம் செடிகள் வளர்ச்சி இழக்கும்.
4. கடுமையான தாக்கத்தில் முழு செடியும் அழியக்கூடும்.

**விவசாயிகளுக்கு ஏற்படும் சவால்கள்**

**1. அதிக விளைச்சல் இழப்பு**

படைப்புழு தாக்கத்தால் 30% முதல் 60% வரை விளைச்சல் குறைய வாய்ப்பு உள்ளது.

**2. அதிக செலவு**

பூச்சிக்கொல்லி மருந்துகளுக்கான செலவு அதிகரிக்கிறது. பலமுறை மருந்து தெளிக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

**3. விரைவான பரவல்**

இந்த பூச்சி ஒரு வயலிலிருந்து மற்றொரு வயலுக்கு வேகமாக பரவுகிறது.

**4. பூச்சிக்கொல்லி எதிர்ப்பு சக்தி**

சில மருந்துகளுக்கு எதிர்ப்பு சக்தி உருவாகி கட்டுப்படுத்துவது கடினமாகிறது.

**5. காலநிலை மாற்றத்தின் தாக்கம்**

வெப்பநிலை மற்றும் மழை மாற்றங்கள் இந்த பூச்சி பரவலை அதிகரிக்கின்றன.

**கட்டுப்பாட்டு முறைகள்**

**கலாச்சார முறைகள்**

- சரியான காலத்தில் விதைப்பு செய்ய வேண்டும்.
- வயலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்.
- பயிர் மாற்று முறையை பின்பற்ற வேண்டும்.

**இயந்திர முறைகள்**

- முட்டைத் தொகுதிகளை சேகரித்து அழிக்க வேண்டும்.
- மணல் மற்றும் சாம்பல் கலவையை செடியின் நடுப்பகுதியில் போடலாம்.

**உயிரியல் கட்டுப்பாடு**

- Trichogramma போன்ற இயற்கை எதிரிகளை பயன் படுத்தலாம்.
- Beauveria bassiana போன்ற உயிரியல் பூச்சிக் கொல்லிகள் பயனுள்ளதாகும்.

**பெரோமோன் கண்ணிகள்**



● பூச்சியின் வருகையை ஆரம்பத்திலேயே கண்டறிய உதவுகிறது.

● ஆண் பட்டாம் பூச்சிகளை கவர்ந்து இனப்பெருக்கத்தை குறைக்கிறது.

**வேதியியல் கட்டுப்பாடு**

தேவையான போது வேளாண் துறை பரிந்துரைக்கும் மருந்துகளை மட்டுமே சரியான அளவில் பயன்படுத்த வேண்டும். ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை (IPM) அவசியம்,

படைப்புழுவை முழுமையாக கட்டுப்படுத்த ஒரே ஒரு முறையை மட்டும் பயன்படுத்துவது போதுமானதல்ல.

- கண்காணிப்பு
- உயிரியல் கட்டுப்பாடு
- கலாச்சார முறைகள்
- தேவையான வேதியியல் கட்டுப்பாடு

இவற்றை ஒருங்கிணைத்து செயல்படுத்தினால் மட்டுமே பயனுள்ள கட்டுப்பாடு கிடைக்கும்.

**முடிவுரை**

படைப்புழு என்பது தற்போதைய வேளாண்மைக்கு மிகப்பெரிய சவாலாக மாறியுள்ளது. ஆனால் ஆரம்ப கட்ட கண்காணிப்பு, விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைந்த மேலாண்மை முறைகள் மூலம் இதன் தாக்கத்தை குறைத்து விவசாயிகள் தங்கள் விளைச்சலையும் வருமானத்தையும் பாதுகாக்க முடியும்.

“படைப்புழுவை கட்டுப்படுத்துவோம் – பயிர் வளத்தை பாதுகாப்போம்!”



கட்டுரை ஆசிரியர் : ***ச.பூர்ணிமா, M.Sc. (Agri)., உதவிப் பேராசிரியர் (பூச்சியியல்), வ.கிருபாலினி, தி.ஜீவிதா, மு.தனுஷியா, ஜெ.சுரேந்தர்(இளங்கலை வேளாண்மை மாணவர்கள்), நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : poorny29@gmail.com.***

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| | | | | |
|---|---|---|---|---|
| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741